**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 108/2024**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | கார்த்திக் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03.03.2026.

**வாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ஆம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**5 மற்றும் 6ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். யார் சொல்லி சாட்சி சொல்ல வந்தேன் என்றால் யுவராஜ் சொன்னார். யுவராஜ் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் மார்கபந்துவின் வாரிசு சான்று கேட்டு வழக்கு போட்டுள்ளார். மார்கபந்து எப்போது காலமானார் என்றால் 12.12.2022.

2. வாதிகள் எனது உறவினர்களா என்றால் இல்லை ஊர்க்காரர்கள். மார்கபந்துவின் மனைவி பெயர் தெரியுமா என்றால் முதல் மனைவி பெயர் கலைவாணி, இரண்டாவது மனைவி பெயர் பரிமளா. பரிமளா தற்போது அனங்கநல்லூரில் வசிக்கிறார். கலைவாணி மற்றும் மார்கபந்துவிற்கு எப்போது திருமணமானது என்று தெரியுமா என்றால் தெரியாது. பரிமளா மற்றும் மார்கபந்துவிற்கு எப்போது திருமணமானது என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. கலைவாணி மற்றும் மார்கபந்துக்கு பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரே மகன் யுவராஜ். கலைவாணி தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். பரிமளா மற்றும் மார்கபந்துக்கு பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர், கார்த்தி, கீந்தன், மகாலட்சுமி. மார்கபந்துவின் அப்பா, அம்மா பெயர் தெரியாது. அவர்கள் தற்போது

உயிரோடு இல்லை ஒரு 20, 25 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்கள். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் மார்கபந்து பற்றியும் எதுவும் தெரியாது என்றாலும் வாதிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.